12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர் அவர்கள்
அருளியது

# கனவும் நனவும்



இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்.


## இந்து இலக்கியக் கழக வெளியீடு

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,118 **கார்த்திகை** மாதம்.

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. **“கனவு” - சித்தரடியான் திரு நெ.சேவுகன் அவர்களின் அருளுலக அனுபவக் குறிப்புக்கள்.**

2. **“நனவு” - அருளாளராக வளர விரும்பும் தம்முடைய மாணாக்கர்களுக்கு குருதேவர் அவர்களின் அறிவுரை.**

3. **‘ஓர் இந்துமத விளக்கம்’ என்ற புத்தகத்திற்கு குருதேவர் அவர்கள் வழங்கிய வணக்கவுரை.**

## இந்து வேத தேவ விளக்கச் சிந்தனைகளில் சில...

பதினெண்சித்தர்கள் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் வழங்கியுள்ள இந்து வேதத்தில்தான்; நொடிக்கு நொடி மனிதனுக்கு ஏற்படும் கோடிக்கணக்கான தேவைகளையும், சிக்கல்களையும், தொல்லைகளையும் தீர்த்துத் தர கோடிக்கணக்கில் வகைவகையான கடவுள்கள் இருக்கிறார்கள் என்று இந்து மதச் சிறப்பு விளக்கப்படுகின்றது.

இந்து மதத்தில் கோடிக்கணக்கில் கடவுள்கள் உண்டு.

இந்து மதக் கடவுள்கள் தேடிவந்து பத்தர்களுக்கு உதவுகிறார்கள்.

இந்து மதத்தில் கடவுளைத் தேடிச் செல்பவர்கள் கடவுள்களைக் காண்கின்றார்கள்.

**ஓம் தாத்தா சித்தர் கருவூரர் துணை**

# கனவு

இனிய நண்பா!

இன்றைய குருமகா சன்னிதானம், தவத்திரு, வேள்வித்திரு, மறைத்திரு, மந்திர மூர்த்தி, கொற்றவை இருக்கை, ஆத்தாள் அமளிகை, பராசத்தி திருவடி, அரசயோகி, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, இராசிவட்டத்து நிறைவுடையார், மத ஆய்வாளர், அருள்மிகு சித்தர் கருவூரர் அவர்களின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் கட்டுப்பட்ட சித்தரடியான், தவத்திரு, பத்தர், பத்தியார், போத்தர், போத்தியார், சித்தியார், (புத்தர்), வீரமாகாளி சன்னிதானம், திருமந்திர ஓலைநாயகம், தெய்வீகக் கலை செயலாளர் நெ.சேவுகன் ஆசிரியர் பணிவுடன், அடக்கத்துடன் எழுதும் அஞ்சல்.

அடியேன், பாண்டி நாட்டில் உள்ள மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கொட்டாம்பட்டி அருகில் உள்ள காரியேந்தல்பட்டி என்னும் சிற்றூரில் பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறேன். தற்சமயம் ஆரம்பப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறேன். சின்னஞ்சிறு வயது முதலாக அடியேனுக்குத் தெய்வீகப் பற்று, கடவுள் நம்பிக்கை அதிகம். அதன் பயனாக எங்கள் ஊரில் ‘வீரமாகாளி’ என்னும் அருள்மிகு சத்தி தெய்வம்; அருள் கொண்டு எழுந்தருளியிருக்கும் அத்தெய்வத்தை தினந்தோறும் வழிபட்டு வருவது வழக்கம். அக்கோவிலுக்கு எவ்விதக் கட்டிடமும் இல்லாமல் ஒரு வேப்பமரத்தடியில் வயல் வரப்பில்தான் அமைந்திருந்தது. என்னை அறியாமல் அத்தெய்வம் ஈர்த்து வந்ததால் சிறுவயது முதற்கொண்டு அதற்கு என்னால் இயன்ற தொண்டு செய்து வந்தேன். 1965ஆம் ஆண்டிலிருந்து ஆத்தாள் வீரமாகாளியிடம் குரு வேண்டும் என்று

ஓயாமற் வேண்டி வந்ததன் பயனுக 1973ஆம் ஆண்டு அருட்குருவான சித்தர் கருவூரர் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, இராசிவட்டத்து நிறைவுடையார், இன்றைய குருமகா சன்னிதானம் அவர்களைக் கண்டேன்.

கண்டபோதே என் உள்மனம் 'தேடியலைந்த குரு கிடைத்து விட்டார்; அடைந்து அருள் பெறுவாயாக' என உணர்த்தியதன் பேரில்; அப்போதே அகம் மகிழ்ந்து ஆத்தாள் பராசத்தி வீரமாகாளியைப் போற்றி வணங்கி; குருவைக் காணச் சென்றேன். குருவும் என்னை வரவேற்று அன்புடன் ஆதரித்து சித்தரடியானுக ஏற்றுக் கொண்டார்கள். ஏழை அடியவன் வீட்டில் வந்து ஒரு வார காலம் தங்கியிருந்து ஆத்தாள் வீரமாகாளி சன்னிதிக்கு வந்து சில பூசை முறைகளையும், கொள்கை விளக்கங்களையும் அறிவித்தார். ஆத்தாள் வீரமாகாளியை அண்டம் பிண்டம் அனைத்தும் நிறைந்து நின்று அருள் வழங்கும் அளவுக்கான பூசை முறைகளை சுருக்கமாகச் செய்தார்கள். அத்தெய்வத்துக்கு உள்ள கட்டுக்களை நீக்கினுர்கள்.

தெய்வங்களை கட்டு நீக்கியதற்குச் சான்றுக உடனே மழை பொழியும் விந்தையும் நிகழ்ந்தது. அப்போது சித்திரை மாதம்; மழைக்கான அறிகுறி காலையிலிருந்து இல்லை; அதற்கு முந்திய நாட்களிலும் இருந்ததில்லை. அன்றைய காலையிலேயே குருதேவர் அவர்கள் "இன்று தெய்வம் கட்டு நீங்கியதற்கு அடையாளமாக மழையும் காற்றும் சேர்ந்து வர வேண்டும்" என்று கூறினுர்கள். அடியவன் குருவின் மீது ஆழ்ந்த நம்பிக்கையும் பற்றும் கொண்டுள்ளதால் குருவை சோதிக்க விரும்பவில்லை. குரு சொல்லுவது அனைத்தும் நடக்கும் என்று மட்டும் நம்பியுள்ளேன். அதன்படி மாலை சுமார் 4 மணி வரையிலும் வானத்தில் மழைக்கான அறிகுறியில்லை. பொழுது விழுவதற்குள் மழை பொழிய வேண்டும்

என்று சித்தர் பெருமான் கூறிவிட்டாரே. அதன்பிறகு குருதேவர் அவர்கள் வீரமாகாளி அருகில் நின்று அத்திற ஓச்சுக்களைச் செய்தார். சுமார் ¼ மணி நேரம் நின்றவாறு நிட்டையில் ஈடுபட்டார். நானும் அருகில் நின்று வேண்டியவாறு நின்றேன். எல்லாம் இறைவன் செயலே. 20, 25 நிமிடங்களுக்குள் வானத்தில் கருமேகம் தென்பட்டது. காற்று சுழன்று வீசியது. கலிகாலமாக இருந்தாலும் நடந்ததைக் கண்ணால் கண்டேன். மழை பொழிந்தது. காற்றும் அதிகமாக வீசியது.

பின் பூசையை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தோம். வரும்போதே குருதேவர் அவர்கள் இரண்டு அத்திறங்களை செலுத்தியதாக நினைவிருக்கிறது. வீட்டில் வந்து அமர்ந்தவுடன் ஆழ்ந்த தவத்தில் அமர்ந்து விட்டார்கள். மழை இரவு 10 மணி வரையிலும் பொழிந்து கொண்டிருந்தது. அதன்பின் எழுந்து குருதேவர் மகிழ்ந்து "நீ நல்ல அடியான்; உனக்கு நல்ல அமைப்பு உள்ளது. வருங்காலத்தில் இத்தெய்வத்தால் உலகம் முழுதும் பயன்பெறும். நல்ல அருட்சத்தி தெய்வம் வழிபட உனக்கு சித்தர்களால் வழங்கப் பட்டுள்ளது. இனி உன் முயற்சி, தன்னம்பிக்கை, குரு நம்பிக்கை, கடமையுணர்ச்சி, பொறுப்புணர்ச்சி, ஆர்வம், ... இவைகளினால் முழுமை பெறுவாய். அவ்வப்போது எல்லாக் கலைகளும், பூசை முறைகளும், பிற மறைகளும், முறைகளும், நெறிகளும், தவங்களும், வேள்விகளும், ஓகங்களும், யாகங்களும், மந்திரங்களும், மாந்தரீகங்களும், தந்திரங்களும், தாந்தரங்களும், தந்திறங்களும், ... வழங்கப்படும். நீ சிறந்த அருட்செல்வன்" - என்றெல்லாம் அருள் வாக்காகக் கூறினார்கள். அடியேன் மகிழ்ந்தேன். அனுதினமும் குருவைப் போற்றினேன். குருவையே முழுமுதற் பரம்பொருளாகவும் கொண்டேன்.

அடியேன் குருவைச் சந்திப்பதற்கு எத்தனையோ தடைகள், துன்பங்கள் இருந்த போதும்; எதையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து குருவைக் கண்டேன். பல விளக்கங்கள் பெற்றேன். பல தோல்விகள் அடைந்தேன். பல இன்னல்கள், ஏமாற்றங்கள், இழப்புகள் அடைந்தேன். பல எதிர்ப்புக்களை, ஏச்சுக்களைச் சந்தித்தேன். பல பழிகள், இழிவுகளை அடைந்தேன் ... இவைகள் அத்தனையும் குருவை விட்டு விலகு விலகு என்றுதான் அச்சுறுத்தின. ஆனால், அடியேன் குருவைச் சிக்கெனப் பற்றிப் பிடித்துக் கொண்டேன். துரும்பானது சுழன்று ஓடும் காட்டாற்று வெள்ளத்தில் அகப்பட்டது போல் துன்பங்களில் உழன்று வருந்திய போதெல்லாம் குருவின் திருவடியை அடியேனின் தலைமேற் கொண்டு ‘குருவே சரணம்’, ‘குருவே போற்றி’, ‘குரு வாழ்க’, ‘குருவே துணை’ என்று வாழ்ந்தேன்.

ஒவ்வொரு நிகழ்ச்சியும் அடியவனுக்குப் புதுப்புது அனுபவங்களைத் தந்தது; அறிவைப் புகட்டியது. குருவை என்றென்றும் என் இதயக் கோயிலில் வைத்துப் பூசை செய்து வருகிறேன். இதையெல்லாம் குருதேவர் அறிந்து எங்களுக்கு நல்லருள் வழங்கினார்கள். அடியவனின் மனைவி சீனியம்மாள் என்பவள் படிக்கத் தெரியாதவள், எளியவள்தான்; இருந்தாலும் எங்கள் பத்திநெறி வாழ்க்கை தழைக்க கணவனும் மனைவியும் தெய்வ வாழ்வில் அநுபவம் பெற மனைவிக்கு குருதேவர் அருள் வழங்கினார்கள். அது முதல் எனது துணைவி அருவுருவாய், மறைவாய் உள்ள எல்லா தெய்வங்கள், தேவர்கள், தேவதைகள், இருடிகள், மகான்கள் - அனைவரையும் நேரில் காணும் சித்தி பெற்றுள்ளாள்.

அவளைக் கண்ணாகக் கொண்டு என் தெய்வீக ஆய்வு வாழ்வை நடத்தி வருகின்றேன். அமர்ந்தவுடனேயே அவள் ஆழ்ந்த தவநிலைக்குச் சென்று விடுவாள். இறைவனைக் கண்டு ஆனந்தத்தில் மூழ்குவாள்; பல விளக்கங்களை, பூசை முறைகளை, சில இரகசியங்களைக்

கூறுவாள். அவள் அந்த ஞான நிலையிலிருந்து கூறும் கூற்றுக்கள் அவளின் சாதாரண அறிவுக்கும் அப்பாற்பட்டது, உயர்ந்தது. அவள் கேட்டறியாத, தெரியாத விளக்கங்களைச் சொல்லுவாள். அப்போது நான் அறிந்தவற்றால் அவைகளுக்கு மேலும் விளக்கம் பெற்று பல ஆய்வுகள் நடத்தி வருகின்றோம்.

இன்றைய குருமகா சன்னிதானம், உலகியலில் கலந்து தொண்டாற்றுவதால் பருவபூசை, அமாவாசைத் தவம், வேள்வி, சித்தர் மருத்துவக்கலை, சித்த மருத்துவக்கலை, மந்திரித்தல், சித்தரடியான்களை உருவாக்குதல், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி எழுதும் இலக்கியங்களுக்கு நகல் எடுத்தல், அவர் விடுக்கும் திருமுகங்களை ஆத்தாள் திருவடியில் வைத்துத் திருவுளச் சம்மதம் பெற்று உரியவர்களுக்கு அனுப்பல் ... முதலிய இன்னோரன்ன பல பணிகளை அடியேன் செய்து வருகின்றேன்.

அடியேன், அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான வேடன் கண்ணப்பரின் வழி வந்தவன்; எனது முற்பிறவி பற்றிப் பாரத காலம் வரை அறிந்தவன். பாரத காலத்தில் குரு துரோணாச்சாரியாராக இருந்து குருகுலத்தைச் சிறப்பாக நடத்திய விவரங்களையும் இப்போது அவ்வப்போது அறிந்து வருகின்றோம். இராமாயண காலத்தில் அடியேனைப் பற்றி அறிய குருவின் துணையும், திருவின் அருளும் வேண்டித் தவமிருந்த போது; இராமாயண காலத்தில் குகனாக இருந்திருக்கின்றேன் என்று பல பழம்பிறப்புப் பேருண்மைகளை உணர்ந்திருக்கின்றோம். இவைகளை யெல்லாம் மற்றவர்கள் நம்பவோ, ஒத்துக் கொள்ளவோ முடியாததாக தற்போது தோன்றலாம். ஆனால் விரைவில் இக் கலிகாலத்திலும் அருட்காலம் தோன்றுவதுண்டு. அப்படித் தோன்றுகின்ற அருட்காலத்தில் பல அருட்செயல்கள் நிறைவேறும். அப்போது

நாங்கள் தொகுத்துள்ள பல உண்மைகள் வெளிவரும் என்று பணிவுடன் கூறிக் கொள்கிறேன்.

நாங்கள் ஆத்தாள் பராசத்தி வீரமாகாளி சன்னிதானத்தில் பூசைகளைச் செய்து வருகின்றோம். முறையான வேள்விகளையும், தவங்களையும் இயற்றி வருகின்றோம். அவ்வப்போது ஞானக் காட்சியில் தோன்றுபவைகளை உடனுக்குடன் குருதேவர் அவர்களுக்கு அஞ்சல் வழி தெரிவித்துக் கொண்டிருக்கிறோம். இப்போது கிடைத்துள்ள குருதேவர் யார் என்பதை நாங்கள் தவத்தால், ஞானத்தால் உணர்ந்து போற்றி வருகின்றோம். குருவின் உண்மை வடிவங்களை, விசுபரூபங்களை, ஆற்றல்களை, முந்தைய நிலைகளை, பழங்கால வாழ்க்கை வரலாறுகளை நாங்கள் அறிந்து வருகின்றோம். நாங்கள் அறிந்தவைகளையெல்லாம் குருவுக்கு தெரியப்படுத்தி குருவின் ஒப்புதலையும் பெற்று வருகின்றோம்.

எங்கள் அருள்மிகு குருதேவர் அவர்கள் முந்தைய பிறப்புக்களின் போது அரிய பெரிய ஞான உபதேசங்களைக் கூறியுள்ளதாகவும் அறிந்து வருகின்றோம். அப்படிப்பட்ட அருட்குருவே, இன்றைய நிலையில் எல்லாவற்றையும் அநுபவித்து நல்ல அறிவும், அருளும் பெற்று பல அரிய பெரிய விளக்கங்களையும், கொள்கைகளையும், பூசைமுறைகளையும், மறைகளையும், முறைகளையும் விளக்கவும்; பல்லாயிரக் கணக்கான நூல்கள் வெளியிட்டு தமிழினப் பெருமை, தமிழ் நாட்டின் பெருமை, தமிழ் மொழியின் தொன்மை ... முதலியவைகளை உலகுக்கு அறிவிக்கத் தயாராக உள்ளார்கள். அதற்காகக் குருதேவர் அவர்கள் இரவு பகலாகக் கண்விழித்து எழுதிக் கொண்டேயுள்ளார்கள்.

“பாண்டிய அரச பாரம்பரியத்தின் பெருமை கூறும் வரலாறுன மகாபாரதத்தைத் ‘திங்கள்குல அரசபாரம்பரியம்’ என்றும்; சோழ அரச பாரம்பரியத்தின் பெருமை கூறும் வரலாறுன இராமயணத்தைச்

'சூரியகுல அரசபாரம்பரியம்' என்றும்; சித்தர்களின் பாரம்பரியப் பெருமை கூறும் வரலாறென உள்ள பல நூல்களின் தொகுப்பே 'குரு பாரம்பரியம்' என்றும் வழங்கப் பெறும்.

"சாத்திரங்கள் ஐந்து, நூல்கள் ஐந்து, நிலைகள் எட்டு என இத்திறத்தே பதினெட்டும் குருபாரம்பரியமாயின."

| **சாத்திரங்கள் ஐந்து** | | **நூல்கள் ஐந்து** | | **நிலைகள் எட்டு** | |
|---|---|---|---|---|---|
| கன்னியர் சாத்திரம் | 7 | தவ நூல் | 18 | சித்தர்படி நிலை | 6 |
| சித்தர் சாத்திரம் | 18 | வேள்வி நூல் | 36 | கோள் நிலை | 9 |
| கருப்பு சாத்திரம் | 18 | ஞான நூல் | 54 | இராசி நிலை | 12 |
| தேவர் சாத்திரம் | 33 | சித்த நூல் | 72 | விண்மீன் நிலை | 27 |
| இருடி சாத்திரம் | 48 | தத்துவ நூல் | 96 | சித்தர் நிலை | 64 |
| | | | | திருமால் நிலை | 108 |
| | | | | சத்தி நிலை | 243 |
| | | | | சிவ நிலை | 1008 |
| மொத்தம் | 124 | | 276 | | 1477 |

மொத்த நூல்கள் = 124 + 276 + 1477 = 1877.

"'குருபாரம்பரியம்' எனும் சித்தர்களின் வரலாற்று நூல்களைத் தவிர; நுண்கலை நூல்கள் (Minute Arts), கவின்கலை நூல்கள் (Religious Books), அரசியல் நூல்கள் (Political Books), மருத்துவ நூல்கள் (Medical Books), கட்டிட சாத்திற நூல்கள் (Engineering Books) ... முதலிய இன்னோரன்ன பிற நூல்கள் முழுதும் அச்சிட்டு உலகறியச் செய்யும் பணி எமது பெரும் பணிகளில் ஒன்றாகும்." என்று அருள்மிகு குருதேவர் அவர்கள் கூறியுள்ளார். இப்படிப்பட்ட அரிய, பெரிய, உயரிய, சீரிய நூல்களையெல்லாம் உலகறியச் செய்வதன் மூலம்தான் தமிழ் மொழி, தமிழினம், தமிழ் நாடு எல்லாச் சிறப்பும், வளமும், பொலிவும் பெறும் என்பதை தமிழர்கள்

அனைவரும் உணர வேண்டும். தமிழர்களாகிய நாம் இவ்வரிய செயல் விரைந்து வெற்றி பெற ஒத்துழைக்க வேண்டும் என்பது அடியவனின் நோக்கம்.

இனிய நண்பா!

'தனிமரம் தோப்பாகாது' என்பதைக் குருதேவர் அவர்கள் பலமுறை சொல்லியிருப்பதன் பயனாக நானும் பல அருளாளர்களை உருவாக்க முயலுகிறேன். ஆனால் மனித நெஞ்சங்களில் அருட்பயிர் விளைவிப்பது எளிய செயலல்ல. பெரிய எதிர்ப்பு, பகை, இழிவு, அழிவு, சிக்கல், ... முதலியவைகளை வழங்கிடக் கூடியது என்பதை அநுபவத்தால் உணர்ந்து விட்டேன். அதனால்தான், குருதேவர் ஆணையின்படி சிலருடன் மட்டுமே தொடர்பு கொள்ளுகின்றேன்.

தெய்வீக அநுபவங்களை எல்லாரிடமும் பகிர்ந்து கொள்ள இயலாது. அது நகைப்புக்கும், நலிவுக்கும், அழிவுக்குமே வழியமைத்திடும். இதைத்தான் அருட்செல்வர்களின் அல்லல், தொல்லை, எதிர்ப்பு, சோதனை, வேதனை, அழிவு... மிக்க வாழ்க்கை வரலாறுகள் விளக்குகின்றன. இவற்றை நான் நன்குணர்ந்து விட்டதால் என் முயற்சிகள், பயிற்சிகள், சித்திகள் ... அனைத்தையுமே இலக்கியமாக எழுதி வருகிறேன். வருங்காலத்தில் தங்களைப் போன்ற பெரியார்களின் துணை; என் போன்ற தெய்வீகப் பணியாளர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

இனிய நண்பா!

இந்து மதம் வெறும் கற்பனை மதமல்ல; உருவாக்கியவர்களும், உயிர்நாடியான தத்துவ நூல்களும், அருளாளர்களும் தொடர்ந்து தோன்றி வரக் கூடிய நெடிய பெரிய பாரம்பரியங்களை உடைய உண்மை மதமே இந்து மதம். விண்ணுயர்ந்த கோபுரங்களையும், மண்திண்ணு உடலையும், காலம் அழிக்க முடியாத கலைகளையும் கண்டுபிடித்து நிலைநாட்டிய சித்தர்கள்; காலம்தோறும் விந்துவழி

வாரிசாகவும், குருவழி வாரிசாகவும் தோன்றித் தோன்றிச் செயல்படுகின்ற மதமே இந்து மதம்.

இந்து மதத்தின் தத்துவங்கள் உலகம் முழுவதும் பரவியவை. ‘உலகில் தோன்றிய மதங்கள் அனைத்தும் இந்து மதம் எனும் ஆலமரக் கிளைகளிலிருந்து இறங்கிய விழுதுகளே’, ‘எல்லா மதமும் இறைவனைப் போற்றுவனவே’, ‘எல்லா மதத்தின் தலைவர்களும் திருவருட்செல்வர்களே’, ‘எல்லா மதத்தின் நூல்களும் அருள்வாக்குகளே’, ‘எல்லா மதநம்பிக்கைகளும், சாத்திற சம்பிறதாயங்களும் இறைவனருளால் மனிதன் வாயிலாக வெளியிடப் பட்டவையே’, ‘கன்பியூசியசு, சொராசிட்டர், புத்தர், மகாவீரர், இயேசு, மாணிக்கவாசகர், சுந்தரர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், முகம்மது நபி, பட்டினத்தார், அருணகிரியார், தாயுமானவர், இராமலிங்க அடிகளார் முதலியோரனைவரும் சித்தர் நெறி எனும் பேராற்றின் இருமருங்கிலும் செழித்து வளர்ந்திட்ட பழத் தோட்டங்களையும், மலர் வனங்களையும் போன்றவர்களே!’, இறையருள் சித்தர்நெறி யென்னும் பேராருகவே இம்மண்ணுலகில் ஓடுகின்றது. இவ்வாற்று நீரைத் தனிமனிதர்கள் பயன்படுத்தி நிறைவு பெறுவதும், ஒரு பெரிய சமுதாயமே பயன்படுத்தி நிறைவு பெறுவதும் அந்தந்தக் காலத்துத் தேவைகளைப் பொறுத்ததே.

இன்றைய பனிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி ஆர்வமிக்கவர்களை ஒன்று திரட்டி ‘மடம்’, ‘அமளிகை’, ‘இருக்கை’, ‘திருவடி’, ‘சன்னிதானம்’ முதலிய அமைப்புக்களை நாடெங்கும் உருவாக்கிச் சமய மறுமலர்ச்சியினை ஏற்படுத்திடுகின்றார்கள். அவர்களின் திருப்பணி ஆரவாரமான விளம்பரமோ, ஆடம்பரத் தன்மையோ அற்று அமைதியாக நிகழ்த்தப்படுகின்றது. பீடாதிபதியவர்கள் உடல்நோய் போக்கும் பல சித்த மருத்துவ மருந்துகளைப் பெருமளவில் தயாரித்து விற்பனைச் சரக்குகளாக ஆக்கிப் பொருளீட்டிப் பல திருப்பணிகளைச் செய்யும் திட்டத்தில் அடியேனுக்கும் பொறுப்பு

நல்கியுள்ளார். உடல் நலம் பேணலும், உயிர் நலம் பேணலும் சித்தர் நெறியின் பயனுகும்.

எல்லாக் கோள்களுக்கும் வேள்விப் பூசைகள் செய்ய வேண்டும் எனக் குருதேவர் அவர்கள் உணர்த்திஞர்கள். அதனுல் இந்த பிங்கள ஆண்டு புரட்டாசி மாதம் 10ஆம் தேதி சனீசுவரன் இராசி மாறும் நேரத்தை வித்தியாசமாக கூறியுள்ளதால்; முதல் நாளே பூசை செய்து சனீசுவரனே அழைத்துக் கேட்டோம். அப்போது அவர், தான் கடக இராசியிலிருந்து சிம்ம ராசிக்கு இரவு 3.25க்கு மாறுவதால் இரவு முழுவதும் பூசை செய்து அந்த நேரத்தில் சில முக்கியமான பூசைகளேச் செய்யும்படி தெரிவித்தார். அதன்படி சனிப் பெயர்ச்சியன்று இரவு முழுவதும் வேள்வி செய்தும், வேண்டித் தவபூசையும் செய்தோம். சனிபகவானே மிக்க மகிழ்ந்தார். அதாவது திரேதகாயுகம், துவாபரயுகம் இந்த யுகங்களில்தான் சனீசுவரனுக்கு இந்த மாதிரிப் பூசைகள், வேள்விகள் நடந்ததாக அவரே கூறிஞர். 1008 சிவாலயங்கள், 243 சத்தி பீடங்கள், 108 திருப்பதிகள், 1½ இலட்சம் கோயில்கள், முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெட்டாயிரம் கோடி இருடிகள் ..... முதலான சத்திகள் அனேத்தும் சனீசுவரனுக்காகச் செய்த வேள்வி பூசையில் கலந்து அருள் வழங்கிஞர்கள். முழுக்க முழுக்க குருதேவர் அவர்களும், மற்ற 11 இராசிவட்டக் கருவூரர்களும், ஆதிப் பதினெண்சித்தர்களும்..... அனேவரும் வந்திருந்து அருள் வழங்கிஞர்கள்.

குருதேவர் 400, 500 மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் அருவ நிலேயில் எங்கள் அருகில் இருந்து அவ்வப்போது தேவையான விளக்கங்களேத் தந்து கொண்டேயிருப்பார். அன்றிலிருந்து பிற கோள்கள், இராசி விட்டு இராசி மாறும் போது அவைகளே வேண்டி வேள்விப் பூசைகளே செய்து வருகின்ருேம். ஆக ஒரு மாதத்துக்கு எப்படியும் 4, 5 வேள்விகள் கோள்களுக்கென செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் ஐம்பூதங்கள், தேவர்கள், தேவதைகள்,

ஆதிப் பதினெண்சித்தர்கள், பிற சித்தர்கள், அருவங்கள், அருவுருவங்கள், அரக்கர்கள், காற்றுக்கள், கருப்புக்கள் முதலியோர்களுக்கும் வேள்விகள் செய்து வருகின்றோம். அவரவர்களுக்கு வேள்வி செய்யும் போது குறிப்பிட்ட சத்திகள் சிறப்பாக வருகை தந்து மகிழ்ந்து நல்லருள் வழங்கிக் கொண்டேயுள்ளார்கள். எங்களுடைய வேள்விகளையும், பூசைகளையும் பல அரக்கர்கள் தடுத்து நிலைகுலையச் செய்வதால் அவர்களுக்கும் மாதந்தோறும் வேள்விகள் செய்து வருகின்றோம். இதனால் அவர்கள் மகிழ்கின்றார்கள்.

பூசை செய்யும் அத்தனை பேர்களுக்கும் ஞானக்காட்சி மூலம் எல்லா விவரங்களும் தெரிகின்றன. எல்லா அருவங்களையும் பார்க்கின்றோம். பல வகையான வடிவங்களையும் அறிகின்றோம். நாங்கள் பெரும்பாலும் இரவு நேரங்களில் வேள்விகள், பூசைகள் அதிகமாகச் செய்து வருவதால் வான மண்டலத்திலுள்ள 27 விண்மீன் கூட்டங்கள், 12 இராசிகளின் வீடுகள், 9 கோள்கள் இவைகளைப் படிப்படியாக குருவை நினைத்து இவை இவை என்று கண்டு வருகின்றோம். எங்கள் ஐயம் நீங்க அவ்வப்போது குரு இருந்து நேரில் கூறுவது போல கூறுவார்கள். தடைகள் வரும் போதும், ஆபத்து வரும் போதும் குருதேவர் அவர்கள் எங்களின் ஞானக்காட்சியில் தோன்றி உணர்த்தி அவற்றிற்கு பரிகாரங்களையும் கூறிவிடுவார்கள். அவைகளும் உண்மையில் நடந்து குருவருளால் திருவருளால் ஆபத்துக்களிலிருந்து தப்பிக்கும் அளவுக்கு நடந்து வருகின்றன.

சனீசுவரன் 2½ ஆண்டுக்கு ஒரு முறை வீடு மாறுவதால் அன்றைய தினத்தில் சனீசுவரனுக்கு ஒரு வேள்வியும்; குருவுக்கு வருடம் 1க்கு 1 வேள்வியும்; சூரியன், புதன், சுக்கிரன் மாதம் 1க்கு ஒரு வேள்வியும்; இராகு கேதுக்களுக்கு 1½ வருடங்களுக்கு

ஒரு வேள்வியும்; செவ்வாய்க்கு 1½ மாதத்துக்கு ஒரு வேள்வியும்; சந்திரனுக்கு பௌர்ணமி, அமாவாசை தினங்களில் வேள்வியும் ஆக இப்படிச் செய்து வருகின்றோம். ஆதிகால மனிதர்கள் வான மண்டலத்தைப் பற்றி பகுத்துப் பிரித்தது மிகப் பொருத்தமாக உள்ளது. சந்திரன் இயக்கத்திலிருந்து விண்மீன் கூட்டங்களையும், கோள்களையும் அறிந்து வருகின்றோம். வானத்தைப் பார்த்த மட்டில் இன்ன கோள் இன்ன இராசிவட்டத்தில் உள்ளது என்று கண்டுபிடிக்கும் அளவுக்கு வீரமாகாளி சன்னிதானச் சீடர்கள் பயிற்சி பெற்று வருகின்றோம். நாள், கோள், விண்மீன்கள் வழிபாட்டை முறையாகச் செய்து வருகிறோம்.

மற்றும் மாதம் ஒரு முறை முழு நிலவன்று மாலை நேரத்தில் நீர்த்துறையில் நிறைகலசம் வைத்து வழிபாடு செய்து இரவு 10 மணி வரையிலும் பருவபூசை என்று செய்து வருகிறோம். இதுவரை வீரமாகாளி சன்னிதானக் குருகுலச் சீடர்கள் 45 முழுநிலாப் பருவ பூசைகள் செய்திருக்கிறோம். சித்தர்கள் முறையில் பருவ பூசை மிகச் சிறப்பானது, உயிரானது. நாட்டின் மங்களம் பொங்க இப் பருவபூசை மிகவும் அவசியம் என்று பருவபூசையில் கலந்து கொண்ட தேவர், தெய்வங்கள் ... கூறி வாழ்த்துகிறார்கள்.

சென்ற மாதம் வீரமாகாளி சன்னிதான சீடர்கள் கோவை, மருதமலை, பழனி முதலிய இடங்களுக்குச் சென்றோம். ஆங்காங்குள்ள எல்லா கோயில்களிலும் தவபூசை செய்தோம். மருதமலையில் அடங்கியுள்ள பாம்பாட்டி சித்தர் அவர்கள் எங்களை அன்புடன் வரவேற்று மகிழ்ந்தார். என் துணைவியார் சீனியம்மாளிடம் பாம்பாட்டிச் சித்தரைப் பற்றி கேட்டபோது; பாம்பாட்டிச் சித்தர் அவர்கள் தனது கழுத்து, தலை, மார்பு, இடுப்பு, தொடை, கால், கை ... முதலிய எல்லா உறுப்புகளிலும் பாம்பைத் தொங்க விட்டுக் கொண்டு தவம் புரிவதாகச் சொன்னாள். அதேபோல் மற்ற நண்பர்களும் ஞானக்காட்சி பார்த்துச் சொன்னார்கள். பாம்பாட்டிச்

சித்தர் அங்கே இருப்பதால்தான் மருதமலை கோயில் சிறப்புப் பெற்றுள்ளது என அவரே கூறியதை கேட்டோம்.

அடுத்து பழனிக்கு வந்து போகர் சமாதியில் பூசை செய்தோம். அவரும் மிக்க மகிழ்ந்து எங்கள் அனைவரையும் அருள் விழியால் நோக்கினார். அப்போது கோயிலில் நாத ஒலி ஒலித்தது. அந்த ஒலியிலேயே பழனிக் கோயிலின் தல வரலாற்றை மிக அழகாக எடுத்துரைத்தார். நாங்களும் துவாபரயுக முடிவு, கலிகால ஆரம்பத்தில் போகர் என்னும் சித்தரிடம் சீடர்களாக இருந்திருக்கின்றோம் என்ற செய்தியையும் அறிந்தோம். பழனிக் கோயில் இவ்வளவு சத்தியோடும், அருள் ஊற்றாகவும் விளங்குவதற்கு காரணம் போகர் சமாதியாகி ஆங்குள்ள கருவறையில் நிறைந்துள்ளதால்தான் என்பதை அறிந்தோம்.

மற்றும் போகர் சித்தர் அவர்கள் ஒரு குறிப்பும் தந்தார். “இப்போது பன்னிரெண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, இராசிவட்டத்து நிறைவுடையார், இன்றைய குருமகா சன்னிதானமாக சித்தர் கருவூரார் அவர்கள் தோன்றியுள்ள இக்காலத்தில் நீங்கள் திரும்பவும் தோன்றி அவருடைய மாணாக்கர்களாக இருக்கிறீர்கள் என்பதால்; இக்காலத்தில் அவரின் கீழ் பல சிறப்பான அருட்செயல்கள் நடக்க உள்ளன. இதே போன்ற திருக்கோயில்கள் புதிதாக எல்லாச் சாத்திற சம்பிறதாயங்களோடு கூடிய கோயில்கள் நிர்மாணிக்கப்படும். அதற்கு எல்லாவகை சித்தர்களின் அனுமதியும், ஆதரவும் உண்டு. குருவை விடாமல் தொடர்ந்து செயல்படுங்கள். அடிக்கடி என்னைப் பூசைக்கு அழையுங்கள். தவறாமல் வந்து கலந்து கொள்கிறேன்” என்று போகர் சித்தர் அவர்கள் கூறினார்கள்.

அதன்படி இன்று வரை நடக்கும் எல்லாப் பூசைகளுக்கும் போகர், பாம்பாட்டிச் சித்தர், எல்லா வகைப்பட்ட சித்தர்களும் வந்து கொண்டிருக்கின்றார்கள்; பல விளக்கங்களைச் சொல்லிக் கொண்டேயுள்ளார்கள். வீரமாகாளி சன்னிதானத்தில் சீடர்கள் ஆழ்ந்த

சமாதி நிலைக்குச் சென்று தவத்தில் ஈடுபடும்போது; சில பயிற்சிகளுக்குப் பின்னால் குருவருளால் திருவருளால் அவரவர் தங்களுடைய பழம்பிறப்புக்களை உணர்ந்து தன்னையறிந்து வருகின்றார்கள். எங்கள் அரும் செயல்களில் இவ்வாறு குறிப்பிட்ட ஒன்றிரண்டை மட்டும் கூறினோம்.

குருதேவர் அவர்களின் ஆணையாக, “சித்தர் மருத்துவ ஆராய்ச்சிக்கும், இந்துமத வளர்ச்சிப் பேரவை, உலக மத ஆய்வுக் குழு, சித்தர் நெறி ஆய்வுக் குழு, தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு, தெய்வீக ஆராய்ச்சிக் குழு, பதினெண்சித்தர் ஆய்வுக் குழு … முதலிய பல ஆய்வுக் குழுக்களை கொண்ட ஒரு பதிவு பெற்ற அமைப்பை உருவாக்கி; அவற்றின் நோக்கம், கொள்கை, சட்ட திட்டங்கள் முதலிய இன்னோரன்ன பிற முதன்மைமிகு அடிப்படை விளக்கங்களை நூல் வடிவில் அச்சிட்டுப் பலரையும் இந்த ஆய்வுக் குழுவில் பங்கு பெறும்படிச் செய்ய வேண்டும்.”

இந்த ஆய்வுக் குழு, தன் கொள்கையைப் பரப்ப நூல்களை வெளியிடல், சொற்பொழிவு வழங்கல் முதலிய பணிகளில் ஈடுபடும். தமிழ் மொழி, தமிழினம், தமிழ் நாடு என்ற முக்கோணத்துள்ளேயே இக் குழு தனது எல்லாப் பணிகளையும் அமைத்துக் கொள்ளும். இம் மூன்றும் முறையான வரலாற்றைப் பெற, பகுத்தறிவு விளக்கங்களைப் பெற, உலக அளவில் உணரப்பட உழைப்பதே இக்குழுவின் நோக்கம். இக்குழு என்றென்றும் அரசயோகி, இராசிவட்ட நிறைவுடையார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம் சித்தர் கருவூரார் அவர்களின் தலைமையில் நிலையாகப் பணியாற்றும். தொடர்ந்து உலகம் உள்ள அளவும் பீடாதிபதிகளின் ஆணைப்படியே இத்தலைமை உருவாகி வரும்.

எதையும் முறையாகப் படித்து, முறையாக ஆராய்ந்து பார்த்து முடிவு கண்டு, அதன்பிறகே நம்ப வேண்டும். அவசரப்பட்டு

எதையும் கண்மூடித்தனமாக வெறுப்பதோ! மறுப்பதோ! பழிப்பதோ! அழிப்பதோ! கூடாது. பழமையால் குறிப்பிட்ட கருத்தோ, பழக்கமோ, வழக்கமோ, நம்பிக்கையோ பயனற்றதாகக் கருதப்படுமானாலும்; அதைப் பற்றி ஆய்வுகளை முழுமையாக நிகழ்த்தி, பிறகே அதை அழித்தொழிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும். எதைப் பற்றி ஆய்வு நிகழ்த்தினாலும்; அது தோன்றிய காலம், அதைத் தோற்றுவித்தவர், அது வளர்ந்து வந்த விதம், இன்றைய அதன் நிலை, இதே போக்கில் யாரின் தலையீடும் இல்லாவிட்டால் வருங்காலத்தில் அது அடையக் கூடிய நிலை, அதை அழிக்க வேண்டுமென்றால் என்னென்ன செய்யவேண்டும் ..... என்றிப்படி திட்டவட்டமான போக்கிலேயே நிகழ்த்திடல் வேண்டும். தனி நபரின் சொந்த விருப்பு வெறுப்புகள் ஒரு சமுதாயத்தின் மீது திணிக்கப் பட்டுவிடக் கூடாது.

சமுதாயத்துக்கு பெருமளவில் நன்மை பயப்பதை, தொடர்ந்து ஆய்வுகள் நிகழ்த்தாமல், எந்த விருப்பு வெறுப்பும் வெளியிடப் படுவதை ஆதரிக்கக் கூடாது. காலப் பழமையில் தெரியாது போனவைகளைத் தெரிந்து கொள்ளவும், புரியாது போனவைகளைப் புரிந்து கொள்ளவும், பயன்படுத்தப் படாமல் போனவைகளைப் பயன்படுத்தவும் முயல வேண்டும். அதை விடுத்து இது தெரிய வில்லை, புரியவில்லை, பயன்படுத்தப் படவில்லை; அதனால் இதை மறுப்போம், எதிர்ப்போம், முடிந்தவரை அழிக்கப் பார்ப்போம் என்று செயல்படவே கூடாது.

இந்தியத் துணைக் கண்டத்தின் பூர்வக் குடிகளான தமிழர்களின் பண்பாடு, தெய்வீகம், மருந்து, வரலாறு, இலக்கியம் முதலியவைகளை ஆராய்ந்து நூல்கள் வெளியிட 'பதினெண்சித்தர் ஆராய்ச்சிக் குழு' என்ற ஓர் ஆராய்ச்சிக் குழுவைப் பதிவு செய்ய வேண்டும். இக்குழுவின் முழுமையான இயக்கம் ஐம்பெருங்குழு (5), எண்பேராயம் (8), பேரவை (48 பேர்) ஆகிய மூன்று அமைப்புகளால்

(Board, Council, Society) நிர்வகிக்கப்படும். ஆய்வுகள் அனைத்தும் பகுத்தறிவு நோக்கில், விஞ்ஞானச் சூழலில் (All the results will be carried out with rationalistic approach and in a scientific atmosphere) நிகழ்த்தப்படும். ஆய்வின் முடிவுகள் மக்களுக்கு நூல் வடிவில் வழங்கப்பட்டு எல்லோரும் நன்மை பெறப் பயன்படுத்தப்படும். மனித வாழ்வுக்குத் தேவையான சமய அறிவு (Religious Knowledge), சமுதாய மரபுப் பிடிப்பு (to have a strong hold in social culture), மருத்துவ அறிவு (Medical Knowledge), வரலாற்று அறிவு (Knowledge in History), இலக்கிய அறிவு (Knowledge in Literature) ... முதலியவற்றை முழுமையாக உலகுக்கு வழங்குவதுதான் இக்குழுவின் நோக்கம்.

இக்குழு 'பகுத்தறிவு என்பது பழமையை மறுப்பது, வெறுப்பது, ஏளனம் செய்வது, எதிர்ப்பது, அழிக்க முற்படுவது' என்ற ஒரு தவறான கருத்து; மறுமலர்ச்சியின் பெயரால் மக்களிடையில் பரவி வளர்ந்து வருவதைத் தடுத்துத் திருத்த முயலும். பகுத்தறிவு என்பது மனித வாழ்வின் முன்னேற்றத்துக்குத் தடையாக உள்ள மூடநம்பிக்கைகளை (superstitious beliefs), கண்மூடிப் பழக்க வழக்கங்களைத் திருத்துகின்ற ஒன்றேயாகும். எதையெடுத்தாலும் ஏன்? எப்படி? எதற்கு? எவ்வாறு? எப்பொழுதிருந்து? என்றுவரை? தேவையா? பயனுடையதா?..... என்ற வினாக்களை எழுப்பிச் சிந்தித்துப் பார்க்கின்ற ஓர் அறிவியல் தன்மையே பகுத்தறிவு ஆகும். இத்தன்மையே இல்லாத நிலையில் பகுத்தறிவின் பெயரைச் சொல்லிப் பரவும் அறிவியல் போக்கை தடுக்க இக்குழு முயலும். குருமகா சன்னிதானத்தின் உரையாடல் கருத்துக்களையும், அஞ்சல் கருத்துக்களையும், நூல் கருத்துக்களையும் அடிப்படையாக கொண்டே இந்த 'பதினெண்சித்தர் ஆராய்ச்சிக் குழுவின் கொள்கை விளக்க அறிக்கை' (Manifesto of the Pathinen Siddhars Research Society) உருவாக்கப்பட்டது.

சன்னிதானத்தின் கருத்துக்களும், முயற்சிகளும் குறிப்பிட்ட பதிவு பெற்ற ஓர் அமைப்பின் மூலம் நூல்களாக வெளியிட வேண்டும். தகுதியுடையவர்களுக்குச் சித்தர் நெறிகளில் (training in siddhar culture) பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும் என்ற பெருவிருப்பத்தாலேயே இந்த ஆராய்ச்சிக் குழு உருவாக்கப்படுகிறது. சமயத்தின் பெயரால் அறிவு வளர்ச்சி, சமுதாய ஒற்றுமை, தனி நபரின் பொருளாதாரப் பாதிப்பு, குறிப்பிட்ட சிலரின் சுரண்டல், குறிப்பிட்ட பலரின் உரிமையிழப்பு, தேவையில்லாத செயல்கள், பயனற்ற பழக்க வழக்கங்கள், பகுத்தறிவுக்குப் பொருந்தாத புராணக் கதைகள் ... முதலிய இன்னோரன்ன பிற கேடுகள் மனித சமுதாயத்தில் வளராமல் தடுப்பது இக்குழுவின் தலையாய நோக்கமும், குறிக்கோளும், கொள்கையுமாகும்.

<u>எந்த ஓர் இனமும், மற்றோர் இனத்தை அடிமைப்படுத்தி சுரண்டி வாழ்வதை மனிதப் பண்புக்குரியதாகக் கருத முடியாது. எந்த ஓர் இனமும் உழைக்காமல் ஏமாற்றியே சுக வாழ்வு வாழ்வதை மனிதப் பண்புக்குரியதாகக் கருத முடியாது. இதுபோல் எந்த ஒரு மொழியும் மற்றொரு மொழியைத் தாழ்த்தி, ஆழ்த்தி, வீழ்த்தி உயர்வதை மனித நாகரீகத்துக்கு உரியதாகக் கருத முடியாது. ஒரு மொழியை உயர்த்த இன்னொரு மொழியைத் தாழ்த்துவதும், ஒரு மொழி செழிப்படைய இன்னொரு மொழியை அழிப்பதும் மனித நாகரீகத்துக்கும், பண்பாட்டிற்கும் அப்பாற்பட்டவை; இவை கண்டிப்புக்குரியவையே</u>. இதேபோல் ஒரு சமயநெறி இன்னொரு சமயநெறியின் வீழ்ச்சியில்தான் வளர்ச்சி பெற வேண்டுமென்ற தத்துவம் மனிதத் தன்மைக்கே உரியதல்ல என்பதோடு; இது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றேயாகும். இனம், மொழி, சமயம் பற்றிய இக்கருத்துக்களே ஆராய்ச்சிக் குழுவின் அடிப்படைக் கருத்துக்கள்.

மனித வாழ்வு எங்கு துவங்கி, எங்கு முடிவடைகிறது? இப்பிறப்புக்கு முன் உயிரின் நிலையென்ன? இறப்புக்குப் பின் உயிரின் நிலை என்ன? மனித வாழ்வில் ஏற்படும் விருப்பு, வெறுப்பு, வெற்றி, தோல்வி, இன்பம், துன்பம், நட்பு, பகை முதலியவை எதிர்பாராமல் ஏற்படுபவையா? அல்லது மனிதனுக்கு ஏற்படும் நோய்களுக்கும் முற்பிறவிகளுக்கும் தொடர்பு உண்டா? நோயற்ற வாழ்வு வாழ முடியுமா? மரணத்தை தவிர்க்க முடியுமா? உயிருக்கும் உடம்புக்குமுள்ள தொடர்புகள் எப்படிப் பட்டவை? எல்லா விலங்குகளும் அநுபவிக்க முடியாததை மனிதன் அநுபவிக்க முடிந்தும் வறுமை தடுப்பது ஏன்? கோயில், கடவுள் வழிபாடு ... முதலியவை மனித வாழ்வுக்கு எந்த அளவு உதவுகின்றன? பேசுகின்ற மொழிக்கும், வாழுகின்ற நாட்டுக்கும், பிறந்த இனத்துக்கும், உயிருக்கும் என்ன உறவு? இவை போன்ற எல்லா வினாக்களுக்கும் விடை காண்பது இக்குழுவின் அடிப்படைக் கொள்கையும், குறிக்கோளுமாகும்.

உலகம் இன்று வரை இந்துமதம் என்ற சொல்லை இந்திய துணைக் கண்டத்து மக்களின் மதம் (Hinduism is a mere word which denotes the religion of the Indians) என்றுதான் அறியும். ஆனால் இந்தச் சொல் குறிக்கும் மதம் என்ன? அதன் தத்துவம் என்ன? வரலாறு என்ன? இதைத் தோற்றுவித்தவர் யார்? ... என்பன போன்ற வினாக்களை இன்று வரை உலகம் எழுப்பிச் சிந்திக்கவே இல்லை. உலகத்தை இப்படிச் சிந்திக்கவிடாமல் செய்தவர்கள் ஆரியர்களே! ஆரியர்களின் வேதங்களே இந்திய மக்களின் சமய அடிப்படை என்ற <u>தவறான கருத்தை</u> திறமையாக உலகில் பரப்பிய ஆரியர்கள்; ‘மொழியில் எதுவும் இல்லை’, ‘தமிழர்களுக்கு சமயம் வழங்கியவர்கள் ஆரியர்களே’, ‘இந்திய நாட்டின் சமய மொழி வடமொழியே’ ... என்பன போன்ற வலிமையான கருத்துக்களால் உலகின் அறிவுப் பசியையே அடக்கி விட்டார்கள்.

இந்தியாவின் பூர்வ குடிகளான தமிழர்களின் மதம் சித்தர் நெறி (siddharism). இன்றுள்ள இந்து மதத்தின் தொண்ணூற்றைந்து பங்குத் தத்துவங்கள் சித்தர்களால் வழங்கப்பட்டவை. இந்தியத் துணைக் கண்டத்திலும், உலகின் பிற பகுதிகளிலும் மனிதன் தெய்வத்தை வழிபட வேண்டும் என்ற உணர்வையும், வழிபாட்டு முறைகளையும், வழிபடும் இடங்களையும் உருவாக்கிக் கொடுத்தவர்கள் சித்தர்களே. எனவே இந்து மதத்தை உண்டாக்கியவர்கள் பதினெண் சித்தர்களாவர் என்பதோடு; உலகில் மனிதனுக்கு கடவுளை அறிமுகப் படுத்தியவர்களே இப் பதினெண்சித்தர்கள்தான் என்ற பேருண்மை விரைவில் உலகத்தால் உணரப்பட வேண்டும்.

அனுபவத்தில் இறைவனை உணர, காண, அருள் பெற்றிட உதவும் வழிமுறைகளை உடைய ஒரே மதம் சித்தர் நெறிதான். அதுவே ஆரியக் கலப்பினை பெற்று உலகால் *ஹிந்து மதம்* என்றழைக்கப் படுகிறது. புத்தம், கிறித்துவம், முகமதியம் ... முதலிய மதங்களைப் போன்று இந்து மதம் விரிவாக உலகெங்கும் பரவியிருந்ததை ஆரியர்கள் சிதைத்ததால்தான் இன்றுவரை அவர்களால் இந்து மதத்தில் செல்வாக்குள்ள உயர்குலத்தவராய் வாழ முடிகிறது. மீண்டும் உலகெங்கும் திருநீறும், குங்குமமும், திருமண்ணும், திருச்சந்தனமும், திருச்சாந்தும் அணிந்து இறைவனின் திருவருளைத் துய்த்துப் பேரின்ப வாழ்வு வாழும் நிலை ஏற்பட வேண்டும்.

“சித்தர்கள் கட்டிய தேவாலயங்கள், திருக்கோயில்கள், இருக்கைகள், பீடங்கள், மடங்கள், அமளிகைகள், திருப்பதிகள், அருட்கோட்டங்கள், யாக சாலைகள்..... முதலிய இன்னோரன்ன பிற வழிபாட்டு இடங்கள் உலகெங்குமுள்ள பேருண்மையினைச் சான்றுகளோடும், ஊன்றுகளோடும் (with proofs and evidences) ஆராய்ச்சிப் பூர்வமாக நிலைநாட்டினால்தான் உலகில் மனித இனத்தின் பொற்காலம் உருவாகும்” என்று அரிய பல அருளாணைகளைப் பெற்றுள்ளோம். அதன்படி நாங்கள்

செயல்படுவதற்காக வீரமாகாளி சன்னிதானக் குருகுலம் ஆரம்பித்து அதன்மூலம் பல ஆக்கப்பணிகளை நிறைவேற்ற உள்ளோம்.

குருகுலம் ஆரம்பித்துத் தொடங்கி விட்டால் ஆங்காங்குள்ள பல சித்தரடியான்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இன்றைய குருமகா சன்னிதானம் அவர்களின் தலைமையில் செயல்பட ஏதுவாக இருக்கும். தமிழ் இனத்தவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இப்புனிதமான அருள்மயமான ஆக்கத் திட்டங்களுக்கு ஆதரவளிக்க வேண்டுகின்றோம். பொருள் வசதி மிக்கவர்கள், தாம் இப்பிறப்பில் பெற்ற பொருளால் எந்தவிதமான சிறப்பையும் அடைய முடியாது. அதனால் பெற்ற பொருளால் இவை போன்ற அருட் செயல்கள் நடக்கத் தங்களிடம் இருக்கும் பொருளை அன்புடன் அளித்து தாம் பிறந்த பிறவிப் பயன்களை அடைய வேண்டுகின்றோம்.

அன்பே சிவம்
ஓம் திருச்சிற்றம்பலம்

அன்புள்ள

**சித்தரடியான்**
**நெ.சேவுகன்.**

**//உண்மை நகல்//**

**//மூலநகல்:- வேம்படிதாளம் சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்துப் பிறதி நூலகத்திலிருந்து கிடைக்கப் பெற்றது. கட்டுரையின் உள்ளே இருக்கும் குறிப்புக்களால் இக்கட்டுரை 1977-78இல் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப் படுகின்றது.//**

# நனவு

இனிய நண்பா!

கலிகாலத்தில் தங்களைப் போன்று சில ஆயிரம் பேர்களே உண்மையான தன்னம்பிக்கையும், தெளிவும், துணிவும், தளரா முயற்சியும் உடையவர்களாக வாழ்ந்து தெய்வீகத் துறையில் வளர்ந்தோங்கி சிறந்து வருகிறுர்கள். நீங்கள்தான் குளிர்ந்த நிழலும், மணமிக்க மலர்களும், இனிய சுவைமிக்க கனிகளும் உலகுக்கு வழங்கக் கூடிய கனிமலர்ச் சோலைகள் ஆவீர்கள். உங்களைப் போன்றுேரை மிகுதியாக உருவாக்குவதன் மூலம்தான் அல்லல்பட்டு ஆற்ருது அலைந்து அலைந்து அரற்றும் மனித இனத்திற்கு நிலையான தொண்டினைச் செய்ய முடியும் என்று திட்டமிட்டே, யாம் தொடர்ந்து இலைமறை காயாகவே வாழ்ந்து செயல்பட்டு வருகிறுேம்.

நண்பா! திருவருள் அவ்வப்போது இடுகின்ற ஆணைகளைக் குருவின் ஒப்புதலோடு செயலாக்கி வரவேண்டிய தொண்டனுக வாழும் நான், என்னுடைய முயற்சிகளை அவ்வப்போது வெளி உலகம் உணருமாறு செய்து வருகிறேன். ஆனுல், அம்முயற்சிகள் எவ்வளவு பெரியவைகளாக இருந்தாலும் உரிய பயனைத் தருவதில்லை.

“உருவத்தால் பெரிய மரங்களானுலும்
பருவத்தால் அன்றிப் பழா”

-- என்ற மூதுரையை மனதில் கொண்டே, எமது முயற்சிகளின் முடிவுகளைப் பற்றிக் கவலைப் படாமல் தொடர்ந்து பொறுமையோடும், அமைதியோடும் செயல்பட்டு வருகின்றுேம்.

“அவனின்றி அணுவும் அசையாது”
“அவனருளால் அவன் தாள் வணங்கி”

என்ற திருவருட் கருத்துக்கள் நம்மைப் பொறுத்தவரை மெய்யாகி வருகின்றன.

> "பட்டது போதும், பட்டது போதும் - இனிப்
> பட முடியாது துயர்....."

- என்று திருவருட் செல்வர்கள் புலம்புவது வழக்கமாக நிகழ்வதுதான். எனவே, தாங்கள் தங்களுக்கு ஏற்படக் கூடிய தோல்விகளுக்கும், இடர்ப்பாடுகளுக்கும், எதிர்ப்புகளுக்கும் மயங்காது தொடர்ந்து அமைதியான முறையில் செயல்பட்டு வாருங்கள். பிறர் உங்களை நம்ப வேண்டும் என்பதற்காக மாயங்களைச் செய்து காட்டவோ, தெய்வீகப் பேருண்மைகளையும், அநுபவங்களையும் தகுதியற்றவர்களிடம் எல்லாம் வெளிப்படையாகப் பேசிடவோ முற்பட்டு விடாதீர்கள். பேரொளி பரப்பும் தெய்வீக ஆற்றல்கள், அஞ்ஞான இருளில் உழன்று தடுமாறும் கோடிக்கணக்கான மக்களுக்கு ஒளிகாட்டி வழிகாட்டும் நற்காலம் வரும்வரை; பொறுமையாக, முறையாகப் பூசைகளையும், தவங்களையும், வேள்விகளையும், யாகங்களையும், பிற தெய்வீகக் கடமைகளையும் தொடர்ந்து செய்து வாருங்கள். வைரத்தை எல்லோராலும் எடை போட முடியாது. அது போலத் தெய்வீக வாழ்வு வாழ்பவரை எல்லோரும் எடை போட்டு விட முடியாது.

உங்களைச் சுற்றி உருவாகி வரும் அடியார்களையும், அடியான்களையும், அன்புக்குரியோர்களையும் மிகவும் கட்டுப்பாட்டோடு தெய்வீகத் துறையில் ஈடுபட்டு அநுபவங்களைப் பெறும்படிச் செய்யுங்கள். வீணான ஆடம்பரமோ, ஆரவாரமோ, கூட்டமோ தேவையில்லை. விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலர் உங்களால் உருவாக்கப் பட்டால் போதும். அப்படி உருவாகுகின்றவர்கள் பகுத்தறிவும், புதுமை நாட்டமும், புரட்சி உள்ளமும், தன்னலமின்மையும், பிறர் நலம் பேணும் பண்பும், தன்னம்பிக்கையும்,

குரு நம்பிக்கையும், தெய்வ நம்பிக்கையும், துணிவும், தெளிவும், உண்மையும் உடையவர்களாக இருந்திட்டால் போதும்.

நண்பா! மனித வாழ்க்கையில் எந்த நேரத்திலும் மரணம் வரலாம். ஒவ்வொரு மனிதனும் அதை நிம்மதியோடும், துணிவோடும் வரவேற்கத் தயாராக இருக்க வேண்டும். அதாவது, ஒவ்வொரு மனிதனும் தான் எடுத்த மனிதப் பிறப்பு தன்னால் வீணடிக்கப் படவில்லை என்ற தன்னம்பிக்கையோடு வாழ்ந்திடல் வேண்டும். எனவே, ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய ஒவ்வொரு நொடி வாழ்வையும் பிறர் நலம் பேணுவதாக அமைத்துக் கொண்டு வாழ வேண்டும். மனிதனுகப் பிறந்தது மண், பெண், பொன் முதலியவைகளை அனுபவிப்பதற்காகத்தான் என்று தவறுகப் பலரால் கருதப்பட்டு வீணுக்கப் படுகின்றது. அதனுல்தான், இவ்வுலகில், எண்ணற்ற திருவருட் செல்வர்கள் தோன்றியும் மனித இனத்தைச் செம்மைப் படுத்தவே முடியவில்லை.

நண்பா! உலகில் எந்த நாட்டு வரலாற்று ஏடுகளைப் புரட்டினுலும் தனிமனிதர்களான அரசர்கள், அமைச்சர்கள், தளபதிகள், பெருநிலக் கிழார்கள், பெருவணிகர்கள்..... முதலியோரின் வரலாற்றைக் கூறுபவையாகத்தான் உள்ளன. ஒட்டு மொத்தமாக ஒரு நாட்டில் வாழ்ந்த மக்களின் சமுதாய வாழ்வின் போக்கைக் கூறும் வரலாற்று ஏடுகளே இல்லை. ஆனுல், பதினேராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் எழுத்துக் குவியல்களில் உலக வரலாறு, இந்திய வரலாறு, தமிழக வரலாறு, ..... முதலியவற்றைத் தெளிவாகக் காணலாம். அதனுல்தான், அவர் தொகுத்தளித்திட்ட நூல்களையும், அவர் எழுதிய நூல்களையும் அச்சிட்டு வெளியிடுவதன் மூலம் உலக வரலாற்றுத் துறைக்கும், இலக்கியத் துறைக்கும் மாபெரும்

புதையல்களும், கருவூலங்களும் கிடைக்கும்படிச் செய்தவர்களாவோம் நாம். நமது முயற்சிகள் எப்படியும் வெற்றி பெற்றே தீரும்.

நண்பா! காம உணர்ச்சியும், சமய உணர்ச்சியும் இன்றைய நமது சமுதாயத்தை மயக்க நிலையிலும், வெறி நிலையிலும் செயல்படச் செய்து வருகின்றன. இவ்விரு உணர்ச்சிகளையும் ஊக்குவித்து வளர்ப்பனவாகவே இன்றைய நமது எழுத்தாளர்களும், படித்த மக்களும், கலைஞர்களும், அரசியல்வாதிகளும்..... உள்ளனர். எனவே, நான், எனது புதுமைச் சிந்தனைகளை, புரட்சிச் சிந்தனைகளை விரைவில் நல்ல பலநூல்களாக்கி விரைந்து வெளியிட்டிடல் இன்றியமையாததாகும். அதுதான், சமய மறுமலர்ச்சியை, இலக்கியப் புரட்சியை, அரசியல் விழிச்சியை, சமுதாய எழுச்சியை உருவாக்கிடும். இதனை விரைந்து செய்யாவிடில் நாம் மாபெருந் தவறு செய்தவர்களாவோம். வருங்காலச் சந்ததியார் நம்மைக் குறைகூறிக் குற்றம் சாட்டிடுவார்கள்.

நண்பா! என்னிடம் வரலாறு, இலக்கியம், சமயம், கலை, மருத்துவம், ..... முதலிய பல துறைகள் பற்றிய பழமையான நூல்களும்; நான், எனது நாடோடிக் காடோடி வாழ்வின் அநுபவங்களாலும்; ஏட்டறிவாலும் எழுதிக் குவித்திட்ட நூல்களும் எண்ணற்று உள்ளன. ஆனால், அவற்றை அச்சிட வழியில்லை.

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல்: வேம்படிதாளம் சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது. கட்டுரை எழுதப் பட்ட காலம் பற்றி அறிய முடியவில்லை.//**

# வணக்கவுரை

இந்துக்களுக்கே இந்து மதத்தைப் பற்றி விளக்கி உரைக்க வேண்டிய அவசர அவசியச் சூழ்நிலைகளும், தேவைகளும் ஏற்பட்டு விட்டன. இன்னும் சொல்லப் போனால், தாய்ப்பசு கூடத் தனது கன்றினை அடையாளம் கண்டு கொள்ளக் கூடிய இயற்கையான உய்த்துணர்வு இருக்கும்போது; இந்துக்கள் மட்டும் தங்களின் மூலவர்களாக, காவலர்களாக, அருளுலக வாரிசுகளாக, வாழையடி வாழையாக வாழ்ந்து வரும் தமிழர்களை, தமிழ்மொழியை, தமிழ்நாட்டை உய்த்துணர முடியாமல் போனது ஏன்? எவ்வாறு? எதனால்?

இம்மண்ணுலகில் விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்து மண்ணின் ஈசர்களான [ஈசர் = தலைவர்] **மணீசர்களைப்** பண்பாட்டுக்குரிய மனதைப் பெற்ற **'மனிதர்களாக'** மாற்றியதுதான் இந்துமதம். இந்துமதம் பதினெண்சித்தர்களால்; தங்களது தாய்மொழியான தமிழ்மொழியில் (1986இல்) இன்றைக்கு 43,73,086 ஆண்டுகளுக்கு முன்னால் 'இளமுறியாக் கண்டம்' [இளமை மாறாமல் = The Immatured Soil] என்ற பெருநிலப்பரப்பில் படைக்கப்பட்டது.

தனி மனிதர், குடும்பம், சமூகம், அரசு என்ற நான்கு வகை நிலைகளுக்கும் தேவையான கருத்துக்களை 'வாக்கு', 'வாக்கியம்', 'வாசகம்' என்ற மூன்று வகைகளாக 'இயல்', 'இசை', 'நாடகம்' என்று முத்தமிழில் வழங்கியவர்களே பதினெண்சித்தர்கள்.

இந்து மதத்தைக் 'கருக்கள்', 'குருக்கள்', 'தருக்கள்', 'திருக்கள்' என்ற நான்கு வகை நிலையினரே நாற்சுவர்க் கோட்டையாகக் காத்திடும் மரபு தோற்றுவிக்கப் பட்டது. இவர்கள், 'நான்மறைகள்', 'நான்முறைகள்', 'நானெறிகள்', 'நான்வேதங்கள்' என்ற நான்கு பிரிவு கொண்ட நான்கு செயல்நிலைகளை வடிவமைப்புச் செய்தார்கள். இவற்றின் உயிர் நிலையாக 1. நேமம், 2. நியமம், 3. நிடதம், 4. நிட்டை என்ற நான்கும்; 1. சுருதி, 2. ஆரணம், 3. ஆகமம், 4. மீமாம்சை என்ற நான்கும்

படைக்கப் பட்டன. இவை **துணை, இணை** [நேமம், துணை நேமம், இணை நேமம்] என்ற இரு பிரிவுகளோடு ஒவ்வொன்றும் மூன்று வகையான அமைப்பைப் பெற்றன.

மனிதர்கள், மதத்தைச் செயலாக்கிடப் 1. பூசை [பூ + செய்], 2. தவம், 3. வேள்வி, 4. சித்தம் என்ற நான்கு பெரும் பிரிவுகளாக்கினர். இதன்படி, குருவழியாகப் 1. பயிற்சி, 2. முயற்சி, 3. தேர்ச்சி, 4. முதிர்ச்சி என்ற நான்கு நிலைகளைக் கடக்கும் பாடத்திட்டம் வகுக்கப்பட்டது. அதில் கல்வி கற்றவர்கள் 1. பத்தி, 2. சத்தி, 3. சித்தி, 4. முத்தி என்ற நான்கு வாழ்வியல் நிலைகளைப் பெறும் உறுதியும், வாய்ப்பும், வசதியும் உருவாக்கப் பட்டன.

பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும் இந்து மதத்தைச் செயலாக்கிட; (1) 48 வகைச் சித்தர்கள், (2) 48 வகைக் கருப்புகள், (3) 48 வகை வழிபடு நிலையினர்கள், (4) 48 வகைக் கருவறை மூலவர்கள், (5) 48 வகை அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், (6) 48 வகை மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள், (7) 48 வகைப் பதினெண்சித்தர் பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள், (8) 13 வகைக் கருவழி ஆச்சாரியார்கள், (9) 13 வகைக் குருவழி ஆச்சாரியார்கள் என்று ஒன்பது வகை அருளுலக ஆட்சியாளர்களை உருவாக்கினர்கள்.

இந்து மதத்தில் உயிரோட்டமாக **எண்வகை ஆச்சாரியார்கள்** 1. ஈசுவராச்சாரியார், 2. ஆதிஈசுவராச்சாரியார், 3. சிவாச்சாரியார், 4. ஆதிசிவாச்சாரியார், 5. பரமாச்சாரியார், 6. ஆதிபரமாச்சாரியார், 7. சங்கராச்சாரியார், 8. ஆதிசங்கராச்சாரியார் உருவாக்கப்பட்டு உள்ளனர்.

இவர்களெல்லாம் செயல்பட **<u>முத்தீ ஓம்பல்</u>** என்று 1. கந்தழி நிலை, 2. வள்ளிநிலை, 3. கொடிநிலை என்று மூன்று வகை வழிபாடும்; **<u>ஐந்தீ வேட்டல்</u>** என்று 1. ஓமம், 2. ஓகம், 3. யாகம், 4. யக்ஞம், 5. வேள்வி என்று ஐந்து வகை வழிபாடும் படைக்கப்பட்டன.

<u>கருவூரரின் பரம்பரையினரின் **அருளுலகப் படைப்பாற்றலுக்கு** உரியவையாக இரவில் மட்டும் கூறப்படும்</u> 1. தந்திரம், 2. தந்திறம்,

3. தந்தரம், 4. தாந்தரம், 5. தாந்தரீகம் என்பனவும்; காகபுசுண்டரின் பரம்பரையினரின் **அருளுலகக் காப்பாற்றலுக்கு** [போற்றிப் பேணிப் பாதுகாத்து வளர்த்தல்] உரிய பகலில் மட்டும் கூறக்கூடிய 1. மந்திரம், 2. மந்திறம், 3. மந்தரம், 4. மாந்தரம், 5. மாந்தரீகம் என்பனவும்; இரு காலத்தும் கூறக் கூடிய 1. எந்திரம், 2. எந்திறம், 3. எந்தரம், 4. ஏந்தரம், 5. ஏந்தரீகம் என்பனவும்; இந்து மதத்தில் படைக்கப் பட்டு 'இந்துமதம் ஓர் அண்டபேரண்டமாளும் மதம்' என்ற நிலையைப் பெற்றுள்ளது. மாறாத இளமையும், குன்றாத சுவையும், அமுதப் பண்பும் உடைய உயர்தனிச் செம்மொழியான **தமிழ் மொழியே இந்த அண்டபேரண்டமாளும் இந்து மதத்தின் ஆட்சி மொழி; அருள்மொழி; கடவுள்மொழி; தெய்வமொழி; தேவமொழி** யாகும்.

பதினெண்சித்தர்கள், 1. ஒன்பது கடவுட்கலைகள், 2. ஒன்பது தெய்வீகக்கலைகள், 3. ஒன்பது பேய்க்கலைகள், 4. ஒன்பது நோய்க்கலைகள், 5. ஒன்பது தேய்கலைகள், 6. நாற்பத்தெட்டு அருட்கலைகள், 7. அறுபத்து நான்கு ஆயகலைகள்..... என்று இந்து மதத்துக்காகப் பலவகைக் கலைகளைப் [Arts] படைத்துள்ளார்கள்.

இவர்கள், அருளின் வெளிப்பாடுகளாக 1. அத்திறங்கள், 2. சாத்திறங்கள், 3. சூத்திறங்கள், 4. தோத்திறங்கள், 5. நேத்திறங்கள்... என்று இந்து மதத்துக்காகப் பலவகை அறிவியல்களைப் [Sciences] படைத்துள்ளார்கள்.

இவர்கள் எண்ணற்று உருவாக்கியுள்ள இந்து மதச் சட்டதிட்டக் கட்டுப்பாடுகள் 1. குருபாணி, 2. குருமார் ஒழுக்கம், 3. பூசாவிதி, 4. கருவறைப்படி, 5. பலிநூல், 6. மடநூல், 7. அடுக்களைச் சாத்திறம், 8. படையல்நூல், 9. கனுநூல், 10. மணநூல் 11. மோகநூல், 12. தாக நூல், 13. வேகநூல், 14. போகநூல்..... என்று பல உள்ளன.

இப்படிப் பதினெண்சித்தர்கள் கணக்கற்ற கோடி ஆண்டுகளாக அண்டபேரண்டம் முழுதும் பரவியுள்ள இந்து மதத்தை மிகமிகத் தெளிவாக வரையறுத்து **ஏட்டுலகச் செய்தியாகவும்**, [Theoretical Information], **நாட்டுலக நடைமுறை அநுபவ அறிவாகவும்** [Practical

Knowledge] தூய வாய்மைமிகு அமுதப் பைந்தமிழில் வழங்கியுள்ளார்கள். இப்பேருண்மைகளை உணர முடியாத குருடர்களும், உணர மறுக்கும் திருடர்களும் அன்னியர்களிடம் கைக்கூலி பெற்றுக் கொண்டு **தமிழுக்கும்; தமிழாக உள்ள இந்து மதத்துக்கும்** துணிந்து துரோகிகளாக, விரோதிகளாகச் செயல்படுகிறார்கள். இவர்களை விடப் போலிகளும், நாத்திகர்களும் நல்லவர்களே. எனவே இந்துமத மூலவர்களாகவும், காவலர்களாகவும் உள்ள தமிழர்கள் பொறுப்போடும் பொறுமையோடும் சிந்தித்துத் தங்களை இந்துக்கள் என்று உணர்ந்தும், உணர்த்தியும், உரையாற்றியும் செயல்படல் வேண்டும்.

தமிழ்ப் பண்பாடு, தமிழ் நாகரிகம், தமிழின ஒற்றுமை, தமிழின உரிமை, தமிழகப் பெருமை, தமிழர் தன்மானம், தமிழின மானம்.... முதலிய அனைத்தும் **தமிழ்ப் பாரம்பரியத்தையே வளர்க்கும், விளைவிக்கும் இந்து மதத்தில்தான் உள்ளன என்ற பேருண்மையில்தான் அனைத்து விடிவுமுள்ளன**.

ஒவ்வொரு தமிழனும் சாதி, மதம், அரசியல்கட்சி, பதவிவெறி, பணவெறி, புகழ்வெறி முதலிய அனைத்தையும் கடந்து தன்னைத் **தமிழினத்தான்** என்று மட்டும் உணர்ந்து ஒன்றுதிரண்டு ஒற்றுமைப் பட்டால்தான் வருங்காலம் ஒளி நிறைந்ததாக இருக்கும். இந்த ஒற்றுமையை உருவாக்கும் அறிவியல் நிலையும், ஆற்றல் நிலையும், ஆர்வ நிலையும் **தமிழ்மொழியில் உள்ள இந்து மதத்துக்குத்தான் உண்டு! உண்டு! உண்டு!** என்று கூறி வணக்க உரையை நிறைவு செய்கிறோம்.

**இந்துமதத் தந்தை, குருதேவர்,**
**ஞானாச்சாரியார், குருமகா சன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி**

**//நகல்: சித்தரடியார் திரு சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் உள்ள 4 பக்க நகல். நகல் தேதி: 16/11/1985.//**

# <u>எல்லோரும் மந்தரிப்பது இந்துவேத வழியிலேயே!</u>

..... இந்த உலகைப் பொறுத்தவரை, நடைமுறையில் உள்ள கடவுள்கள் அனைவருமே 'இந்து வேதம்' கூறுகின்ற கடவுள்கள்தான். எனவே, எந்த ஒரு மதமாக இருந்தாலும் இந்து வேத வழியிலேதான் செயல்பட வேண்டியதாக இருக்கிறது. இதனால்தான், எந்த ஒரு புதிய அன்னிய வேற்றுமதக் கடவுளாலோ, வேற்று மதத்தாலோ இந்து வேதத்தையோ, இந்து மதத்தையோ முழுமையாக அழித்து ஏப்பம் விட முடியவில்லை; முழுமையாக அழித்தொழிக்க முடியவில்லை.

**<u>குறிப்பு</u>:-**

இந்த நாட்டில் புதிய மதங்களுக்கு மாற்றப்பட்ட இந்துக்கள், தங்களுடைய இந்து வேதக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும், இந்து மத பழக்க வழக்க நம்பிக்கைகளையும், நடைமுறைகளையும், சடங்குகளையும் முழுமையாக விட்டுவிட முடியாமல்; தங்களையும் மறந்து இந்து வேத வழியில் வாழும் இந்து மதத்தவர்களாகத்தான் வாழ்கிறார்கள். எனவே, புதிய மதத்தவர்களாக மாறியவர்கள்; தங்களுடைய பழைய மதமான இந்து மதத்தை நேரடியாகத் தாக்கி ஒழிக்கும் முயற்சியில் ஈடுபட முடியாமல் தயங்கித் தயங்கி! தேங்கித் தேங்கி! மயங்கி மயங்கி! நிற்கிறார்கள்.

இந்நாட்டில் வளர்ந்துள்ள புதிய மதத்துக்கு மாறிவிட்டவர்கள் செய்கின்ற பூசைகளில் பயன்படக் கூடிய மலர்கள், நறும்புகைகள், ஒளிவிளக்குகள், பலிபொருள்கள், படைக்கும் படையல் பொருள்கள், அருளூறு பூசனைப் பொருட்களாகப் பயன்படுத்தும் சாம்பல், சந்தனம், முடிகயிறு, தாயத்து, சக்கரம், மணிமாலைகள், முத்து, சிப்பி, சோழி..... முதலியவைகள் அனைத்தும் இந்து வேதத்தில் கூறப்படுபவைகளாகவே இருக்கின்றன. இந்து மதத்தில் பயன்படுத்தப்படுபவைகளாகவே இருக்கின்றன.....

*['இந்து வேதச் சிந்தனைகள்' என்ற புத்தகத்திலிருந்து...]*



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்கள்** இந்துமதத் தந்தையாகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினர். **இவர் ஒன்பது பிற்காலச் சோழர் குல மன்னர்களுக்குக் குலகுருவாகவும், அரசரில்லாக் காலங்களில் அரியாசனத்தில் அமர்ந்து அரசோச்சும் ஆட்சித் தலைவராகவும் வாழ்ந்திட்டார். தஞ்சைப் பெரிய கோயிலிலும், நாட்டின் பல பகுதிகளிலும் ‘சிறுபள்ளி’, ‘பெரும்பள்ளி’ என்ற கல்விக் கூடங்களை நடத்திப் பல கலைகளையும் முறையாக வளர்த்திட்டார்.**

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்** அவர்களின் குருவாணைப் படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் உள்ள, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd:933/2017) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org** **www.gurudevar.org**
**www.induism.org** ***Email:*** **indhuism@gmail.com**

www.books.gurudevar.org